# தொல் தமிழர் வழிபாடு சார் விடயங்களை ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

இலங்கையில் வாழ்ந்த பண்டைத் தமிழர் பல வகைப்பட்ட வழிபாட்டு மரபுகளை பேணியவர்களாக விளங்கினர். இவ்வழிபாட்டு மரபுகள் நிலம் அல்லது திணை சார்ந்தவையாகவும் தொழில் மற்றும் சமூக வாழ்வியல் சார்ந்தவையாகவும் அமைந்திருந்தன. இவ்வகையான வழிபாட்டு மரபுகளை தொல்தமிழ் வழிபாட்டு மரபுகள் எனக் குறிப்பிடலாம்.

இவ் வழிபாட்டு முறைகளில் சில இன்றும் தொடரப்பட்டு வருகின்றன. சில வழக்கருகிவிட்டன. இன்றும் தொடர்கின்ற தொல்தமிழ் வழிபாட்டு மரபுகளில் சமஸ்கிருத வழிபாட்டு முறைகள் புகுத்தப்பட்டும் உள்ளன. சில சமஸ்கிருத மயமாக்கத்திற்கு உள்ளாகி மாற்றமடைந்தும் விட்டன. அவ்வகையில் இலங்கையில் வழக்கில் உள்ள தொல்தமிழ் வழிபாட்டு மரபுகளை தொடர்ச்சியானதாகவும் தொடர்ச்சி திரிந்தனவாகவும் கொண்டு பார்க்க வேண்டியதாகின்றது.

அந்த வகையில் நூலக நிறுவனம் தமிழ் வழிபாட்டு மரபுகளை ஆவணப்படுத்தல் எனும் செயற்றிட்டத்தினை முன்னெடுக்க முனைகின்றது.

இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் தொல்தமிழ் வழிபாடுகளில் வழிபடப்படும் தெய்வங்களும்> அத் தெங்வங்களுக்களுக்கான வழிபாடுகளும் தனித்துவமானதொரு பண்பாட்டு மரபை புலப்படுத்தி நிற்கின்றன. இவ்வழிபாடுகளில் பெரும்பான்மையானவை சடங்கு முறையில் அமைந்தவையாகும். இச்சடங்குககள் தனித்துவமானதொரு பண்பாட்டு மரபை புலப்படுத்தி நிற்கின்றன. அத்துடன் இச்சடங்குகள் இலங்கையில் வாழ்ந்த பழந்தமிழர்களின் சமூக பொருளதார பண்பாட்டு அமசங்களை புலப்படுத்துபவையாகவும் விளங்குகின்றன. மேலும் வழிபாட்டுடன் பிணைந்திருக்கின்ற நம்பிக்கைகள், தொன்மங்கள்,சமூக  வரலாறுகள், கோயிலமைப்பு - சோடணை - ஆடை - பாடல் - இசை -  ஆட்ட மரபுகள் போன்றனவும் கவனத்திற் கொள்ளத்தக்கனவாகவும் விளங்குகின்றன.  இத் தனித்துவமான பண்பாட்டம்சங்களை இச்செயற்றிட்டத்தின் மூலம் நூலகம் ஆவணப்படுத்த முனைகின்றது.

தொல்தமிழ் வழிபாட்டு மரபுகள் பல்வேறு பண்பாடுகளின்> சமூக மாற்றங்களின் தாக்கத்திற்கு உட்பட்டு மாற்றமடைந்தும் அருகியும் வரும் ஒரு காலகட்டத்தில்> இச் செயற்றிட்டத்தினை நூலக நிறுவனம் ஆவணப்படுத்த முனைந்திருக்கின்றது. இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் தொல்தமிழ் வழிபாட்டு மரபுகளில் பொதுமைகள் அதன் வரலாற்று மெய்யிற் கட்டமைப்பின் போக்கில் ஆராய்தல் என்பது இன்றியமையாதது. அதனடிப்படையில் இச்செயற்றிட்டம் பின்வரும் தமிழ் வழிபாட்டு மரபுகளை ஆவணப்படுத்த முனைகின்றது.

- ஆசிவக வழிபாட்டு மரபு
- குமாரர் வழிபாட்டு மரபு
- முருகன் - கந்தசுவாமி வழிபாட்டு மரபு
- பழங்குடிகளின் வழிபாட்டு மரபு
- பெரிய சாமி அல்லது கப்பல் வழிபாட்டு மரபு
- நீலாசோதையன் வழிபாட்டு மரபு
- கண்ணகி வழிபாட்டு மரபு
- திரௌபதி அம்மன் வழிபாட்டு மரபு
- கடல் நாச்சியம்மன் வழிபாட்டு மரபு
- நாச்சிமார் வழிபாட்டு மரபு
- காளியம்மன் வழிபாட்டு மரபு
- பேச்சி அம்மன் வழிபாட்டு மரபு
- மாரியம்மன் பழங்குடிகளின் வழிபாட்டு மரபு
- நாகம்பிரான் வழிபாட்டு மரபு
- எழுமங்கயைர் வழிபாட்டு மரபு

ஆசீவக வழிபாட்டு முறை

இலங்கையில் பௌத்தம் வருவதற்கு முன்பிருந்தே விளங்கிய தொன்மரபாக ஆசீவக மரபினைக் கொள்ளலாம். மகாவம்சம் குறிப்பிடும் பண்டுகாபயன் பண்டுவாசுதேவன் முதலான மன்னர்கள் ஆசீவக சமயத்தினைச் சார்ந்தோர் என்பதற்கான பலசான்றுகள் காணப்படுகின்றன. இன்றைய நிலையிலும் தமிழ் மக்களின் வழிபாட்டு மரபிலும் சிங்கள மக்களின் வழிபாட்டு மரபிலும் பல ஆசீவக தொன்மக்கூறுகள் தென்படுவதைக் காணலாம்.

- அனலை தீவிலுள்ள ஐயனார் கோயில்
- சுன்னாகத்தில் அமைந்துள்ள ஐயனார் கோயில்

கண்ணகி வழிபாட்டு மரபு

தமிழ்ப் பண்பாட்டு மண்டலம் எங்கும் வழங்கிவரும் வழிபாட்டு மரபுகளில் ஒன்றாக ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டு விளங்குவது கண்ணகி வழிபாடாகும். சிலப்பதிகாரம் இயற்றப்படுதலுக்கு முன்பே கண்ணகி வழிபாடானது தமிழுலகெங்கும் நடைபெற்றமைக்குச் சிலப்பதிகாரத்திலும் அதற்கு முற்பட்டதான சங்க இலக்கியங்களிலும் சான்றுகள் உண்டு.

- வற்றாப்பளை கண்ணகைஅம்மன் கோயில்
- காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்
- தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயம்

எழுமங்கையர் வழிபாட்டு மரபு

உலகம் முழுமைக்குமான வழிபாட்டு மரபுகளில் கன்னித் தெய்வங்களின் வழிபாடுகளானது மிகவும் பழமை வாய்ந்தனவாகும். அவ்வகையில் மிகப்பழமையான வழிபாட்டு மரபாக அமைவது எழுமங்கை வழிபாட்டு மரபாகும். தமிழ் நாடுகள் ஒவ்வொன்றிலும் மாறுபட்ட பெயர்களில் இவ் வழிபாடானது வழங்கப்படுகின்றது. கொங்குப் பகுதியில் கன்னிமார் வழிபாடு என்றும் பெருங்கோவில்களில் சப்தமாதர்கள் என்றும் வழங்கப்படும் இவ்வழிபாடானது ஈழத்தில் எழுமங்கையர் வழிபாடென்றும் நாச்சிமார் வழிபாடென்றும் வழங்கப்படுகின்றமையினைக் காணலாம்.

முருகவழிபாட்டு மரபு

ஈழநாடு முழுவதும் காணப்படும் முருகவழிபாடானது பல்வேறுபட்ட தன்மைகளை உடையதாக உள்ளமையினைக் காணலாம். வைதீக நிலையினுக்கு உட்படுத்தப்பட்ட முருகவழிபாட்டு முறைகள், தமிழ்த் தரப்பினை அடியொட்டிய முருகவழிபாடு, வேல்வணக்கத்திற்குரிய முருகவழிபாடு, வடமொழி மந்திரங்கள் சொல்லிவழிபடும் மரபு, எவ்வகை உருவமும் அற்ற திரையினை வழிபடும் மரபு, தமிழ் மந்திரங்களால் வழிபடும் மரபு, மந்திரங்கள் எதுவுமற்று வாய்கட்டி வழிபடும் மரபு என்பனவாக முருகவழிபாடுகள்

அமைவதினைக் காணலாம். கோயில்களின் நிலையிலும் இம் மரபின் பல்வகை வகைமைகளைக் காணவியலும்.

- மண்டூர் முருகன் ஆலயம்
- வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்
- கதிர்காமம் முருகன் ஆலயம்
- செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்

## செயற்றிட்ட நோக்கங்கள்

- ஈழத்தமிழர் சார் வரலாற்று வளர்ச்சி தொல் தமிழர் வழிபாட்டு முறையில் சார்ந்திருத்தல் தொடர்பான விடயங்களை ஆராய்தல்
- தமிழர் பண்பாட்டு மரபினை உலகுக்கு அறியச்செய்தல்
- இலங்கையின் வெவ்வேறுபட்ட குழுக்களின் வெவ்வேறுபட்ட வழிபாட்டு முறைகளை ஆவணப்படுத்தல்
- சங்க கால தமிழ் சமூகம் மற்றும் ஈழத்து தமிழ் சமூகத்திற்குமுள்ள தொடர்பினை ஆவணப்படுத்தல்

## செயற்றிட்ட செயன்முறைகள்

- ஆலயங்களை அடையாளங்காணல் - வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள தொல் தமிழர் வழிபாட்டு முறைகளுக்கு உட்பட்ட ஆலயங்களை அடையாளங்கண்டு பட்டியலிடல்
- தரவுகளை சேகரித்தல் - ஆலயங்களது பெயர், அமைவிடம் , சடங்கு முறைகள் ஆகிய தரவுகளை சேகரித்தல். இத்தரவுகள் தன்னார்வலர்களின் உதவியுடனும் , செயற்றிட்ட பொறுப்பாளரினாலும் முன்னெடுக்கப்படும்.
- தரவுத்தளம் ஒன்றினை உருவாக்கல் - சேகரித்த தரவுகளை ஒன்றாக திரட்டி உரிய முறையில் தரவுத்தளமொன்றினை உருவாக்கல்
- செயற்றிட்ட முகப்பு - உரிய மீதரவுகளை வைத்து நூலக விஞ்ஞான விதிகளுக்கமைய வகைப்படுத்தல்களை மேற்கொண்டு இச்செயற்றிட்டத்திற்கென உருவாக்கப்படும் முகப்பினில் இணைக்கப்படும்.

## எதிர்நோக்கும் சவால்களும் தீர்வுகளும்

- செயற்றிட்டத்திட்டனுள் அடங்கும் பெரும்பலான ஆலயங்கள் ஒரே நேரத்தில் சடங்கு காலங்களினை கொண்டிருப்பதால் அனைத்து பிரதேசங்களிலும்  ஒரே நேரத்தில் தரவுகளை சேகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதற்கு தன்னார்வலர்களின் உதவியினை பெற்றுக்கொள்ளும் இச்சவாலினை வெற்றிகொள்ளக்கூடியதாக இருக்கும்.